2013 மே 9] [திரு. கே.பி. அன்பழகன்]

படைக்கும் வாழும் வரலாற்றுத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்களின் பொற்பாதங்கள் பணிந்து வணங்குகிறேன். 2012-2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 116 முதல் 129 வரையிலான 14 அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 12-20

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

***திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையிலே 110 விதியின்கீழ் நெசவாளர்களுடைய துயர் துடைக்க 210 கோடி ரூபாய் செலவில் 10,000 பசுமை வீடுகளையும், ரூ.3.75 கோடி செலவில் 25,000 கைத்தறி நெசவாளர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்களையும், உற்பத்தியையும் வருவாயையும் இரண்டு மடங்காகப் பெருக்குவதற்காக 24 கோடி ரூபாய் மானியத்தில் 6,000 பெடல் தறிகள் வழங்குவதற்கும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் பணியாளர்களுக்கு 1-1-2013 முதல் காலமுறை ஊதியம், பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க பஞ்சாயத்திற்கு ஒரு பட்டு விவசாயி எனத் திட்டங்கள் பல தந்து நெசவாளர்களின் தலைவிதியை மாற்றியமைத்த திராவிட வரலாற்றின் நான்காம் அத்தியாயமே! (மேசையைத் தட்டும் ஒலி) புதுப்புது சாதனைகள் புரிந்து புதுமைகள் படைத்து குன்றாத புகழோடு விளங்கும் வெற்றியின் விலாசமே! (மேசையைத் தட்டும் ஒலி) மனித நேயத்தைப் பேணிக் காத்திடும் மாசற்ற தலைவியே, அன்னை தெரசாவின் அருள் வடிவே, அவ்வை மூதாட்டியின் அறிவுருவே, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழும் எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வரே! (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதப் பிரதமரே! (மேசையைத் தட்டும் ஒலி) தாயாய், தந்தையாய், குருவாய், எங்களை வழி நடத்திடும் மாட்சிமை பொருந்திய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்குக்

[திரு. வி. சோமசுந்தரம்] [2013 மே 9

கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, 2012-2013 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து ஒன்பது முதல் அறுபத்து நான்கு வரையிலான பதினாறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானங்கள். குழுக்களுக்குத் தேர்தல். மதிப்பீட்டுக் குழு. மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195-ன்கீழ், 2013-2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"*

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழு. பொதுக் கணக்குக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை*